**கொழும்பு பெரும்பாக நகர போக்குவரத்து அபிவிருத்திச் செயற்திட்டம் கட்டம் - 01 இன் (வெளிசுற்று வட்டச் நெடுஞ்சாலை செயற்திட்டம்) - 2014**

---

கொழும்பு பெரும்பாக நகர போக்குவரத்து அபிவிருத்திச் செயற்திட்டத்தின் (வெளிசுற்று வட்டச் நெடுஞ்சாலை செயற்திட்டம்) கட்டம் 1 இன் 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. செயற்திட்டமானது 2001 பெப்ரவரி 20 இல் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மைக்கும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் கீழ் கொழும்பு நகரத்தில் வெளிசுற்று வட்டச் நெடுஞ்சாலை மீதான விரிவான வடிவமைப்பு கற்கைக்காக ஜப்பான் யென் 580 மில்லியனிற்கு சமமான ரூபா 417 மில்லியன் தொகையான மானியத்துடன் தொடங்கப்பட்டது. செயற்திட்டத்தின் கட்டம் 1 இன் கீழ் கொட்டாவை தொடக்கம் கடுவலை வரையான 11 கிலோமீற்றர் நெடுஞ்சாலையினை நிர்மாணிப்பதற்கு 2007 மார்ச் 28 இல் சர்வதேச ஒத்துழைப்புக்கான முன்னாள் ஜப்பான் வங்கிக்கும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் இடையில் எஸ்எல் - பி89 ஆம் இலக்க கடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. அதனைத் தொடர்ந்து, செயற்திட்டத்தின் கட்டம் - II இன் கீழ் கடுவலை தொடக்கம் கடவத்தை வரையான 8.9 கிலோமீற்றர் நெடுஞ்சாலை ஒப்பந்தத்திற்கு முறையே 2008 யூலை 29 மற்றும் 2011 மார்ச் 22 இல் இலங்கை அரசாங்கம் மற்றும் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மைக்கும் இடையில் எஸ்எல் - பி91 மற்றும் எஸ்எல்- பி101 ஆகிய இரண்டு கடன் உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டிருந்தன. செயற்திட்டத்தின் கட்டம் - III இன் கீழ் கடவத்தை தொடக்கம் கெரவலபிட்டிய வரையான 9.32 கிலோமீற்றர் நெடுங்சாலையை நிர்மாணிப்பதற்கு 2014 செப்தம்பர் 16 ஆம் திகதி சீனாவின் எக்ஸிம் வங்கிக்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் இடையில் பிரிதொரு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டிருந்தது.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், குறிக்கோள்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

---

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் படி, முன்னாள் நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை அமைச்சும் தற்போதைய பல்கலைக்கழக கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. செயற்திட்டத்தின் நோக்கங்களாவன,

(அ) கொழும்பு பெரும்பாக பிராந்தியத்தில் வாகன நெரிசலைக் குறைக்கும் நோக்கில் கொழும்பு நகரத்திலிருந்து தெற்கு நெடுஞ்சாலை மற்றும் ஏனைய தேசிய வீதிகள் என்பவற்றுடன் இணைந்த கொழும்பின் வெளிப்புறத்தில் நெடுஞ்சாலையை நிர்மாணிப்பதற்கும் அதன் மூலம் நாட்டின் ஏனைய பிராந்தியத்துடன் தொடர்பை உயர்த்துவதற்கும்.

(ஆ) பிரதான வீதிகள் மற்றும் தெற்கு நெடுஞ்சாலைகளை இணைக்கும் கொழும்புக்கு வெளியேயுள்ள நெடுஞ்சாலைகளை நிர்மாணிப்பதன் மூலம் ஏனைய பிராந்தியங்களுடனான இணைப்பை அதிகரிப்பதற்காக கொழும்பு பெரும்பாக பிராந்தியத்தில் வாகன நெரிசலை குறைப்பதற்கும் அதன் மூலம்

இலங்கையிலுள்ள பிராந்தியங்களிற்கு இடையில் பொருளாதார அபிவிருத்தியை வலுப்படுத்துவதற்கும் பங்களிப்பு செய்தலும்.

செயற்திட்டத்தின் கட்டம் - I மற்றும் கட்டம் - II இன் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 72,924 மில்லியனாக இருந்ததுடன் அதில் ஜப்பான் யென் 46,974 மில்லியனிற்கு சமமான ரூபா 52,007 மில்லியன் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மையால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. கட்டம் 1 இன் கீழான நெடுஞ்சாலையின் நிர்மாணம் 2008 மே மாதத்தில் தொடங்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்ததுடன் 2012 ஏப்ரல் அளவில் 48 மாதங்களிற்குள் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது. எவ்வாறாயினும், ஒப்பந்தமானது 2009 ஒக்தோபர் 22 இலேயே வழங்கப்பட்டிருந்ததுடன் 2013 ஆம் ஆண்டளவில் 42 மாதங்களிற்குள் 11 கிலோமீற்றர்கள் மாத்திரம் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது. மேலும், கட்டம் II இன் கீழ் நெடுஞ்சாலை நிர்மாணத்திற்கான ஒப்பந்தம் 2009 ஒக்தோபர் 22 இல் வேறொரு ஒப்பந்தகாரருக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் 2013 திசெம்பர் 23 அளவில் 36 மாதங்களிற்குள் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது. வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் வேண்டுகோளின் பேரில் விநியோகிக்கப்பட்ட முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் 2012 ஏப்ரல் 25 ஆம் திகதிய கடிதத்தின் பிரகாரம், 2011 செப்தம்பர் 05 தொடக்கம் செயற்திட்டத்தின் கட்டம் - II வேறாக கருதப்பட்டிருந்ததுடன் அது பிரிதொரு செயற்திட்ட கண்காணிப்பு பிரிவின் கீழ் செயற்படுத்தப்பட்டிருந்தது. கொட்டாவை முதல் கடுவலை வரையான பிரிவு பூர்த்தியாக்கப்பட்டு 2014 மார்ச் 08 இல் வாகன போக்குவரத்திற்காக திறக்கப்பட்டிருந்தது.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில்

சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிகழ்சித்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிகழ்ச்சித்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவம் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும், செயற்திட்ட தொழிற்பாடுகள் தொடர்பான, ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகளும் கட்டுப்பாடுகளும் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக கணக்கிணக்கம் செய்யப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளிற்கிணங்க இருந்தனவா என்பதும்,

(உ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்டனவா என்பதும்,

(ஊ) செயற்திட்டத்தின் அமுலாக்கலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட இலங்கை பொதுத்துறை கணக்கீட்டுத் நியமங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான அளவீடுகள் எடுக்கப்பட்டிருந்தன என்பதுவும்,

(ஐ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

**1.5 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையில் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக் கூற்றுக்கள்**

**2.1 அபிப்பிராயம்**

இது வரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய, இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிர்த்து,

(அ) செயற்திட்டமானது 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த காலப்பகுதிக்கு முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைய 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்படப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(ஈ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இடைக்கால கொடுப்பனவு சான்றிதழ்களில் காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 23,309,323,443 பெறுமதியான பூர்த்தி செய்யப்பட்ட பணிகள் அதனுடன் தொடர்புடைய பேரேட்டுக் கணக்கில் ரூபா 23,309,776,693 என தவறுதலாக காட்டப்பட்டிருந்தது.

(ஆ) செயற்திட்டத்தின் கட்டம் - III இன் கீழ் மேற்கொள்ளப்பட்ட ஆழ்துளை புலனாய்வுகளுக்காக செலவிடப்பட்ட ரூபா 3,146,672 தொகையானது வெளிசுற்று வட்டச் நெடுஞ்சாலை செயற்திட்டத்தின் - கட்டம் III இற்கு மாற்றப்படுவதற்கு பதிலாக செயற்திட்டத்தின் கட்டம் - I இற்கு மாற்றப்பட்டிருந்தது. மேலும், செயற்திட்டத்தின் கட்டம் - II இற்கான ஆலோசனை கொடுப்பனவாக மீளாய்வாண்டினுள் செலுத்தப்பட்ட ரூபா 94,947,010 தொகையானது தவறுதலாக வெளிசுற்று வட்டச் நெடுஞ்சாலை செயற்திட்டத்தின் - கட்டம் I இற்கு சாட்டப்பட்டிருந்தது.

### 2.2.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) வீதி அபிவிருத்தி அதிகாரசபையில் செயற்திட்டத்தால் பேணப்பட்ட நடைமுறைக் கணக்கு 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 3,213,304 செலுத்த வேண்டிய மீதியொன்றை காட்டியிருந்தது. எவ்வாறாயினும், வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் பேணப்பட்ட தொடர்புபட்ட நடைமுறைக் கணக்கிலுள்ள மீதி அத்திகதியில் உள்ளவாறு ரூபா 432,411 ஆக காட்டப்பட்டிருந்தது. ரூபா 2,780,893 வேறுபாட்டிற்கான காரணம் கணக்காய்விற்கு விளக்கமளிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) செயற்திட்டத்தின் கட்டம் - I இனால் செயற்திட்டத்தின் கட்டம் - II இல் பேணப்பட்ட நடைமுறைக் கணக்கின் மீதியான ரூபா 676,085,438 செயற்திட்டத்தின் கட்டம் - II ஆல் பேணப்பட்ட அதனையொத்த நடைமுறைக் கணக்கின் ரூபா 646,654,827 மீதியுடன் உடன்பட்டிருக்கவில்லை.

(இ) செயற்திட்டத்தின் கட்டம் - I இனால் செயற்திட்டத்தின் கட்டம் - III இல் பேணப்பட்ட நடைமுறைக் கணக்கின் மீதியான ரூபா 1,981,295,504 செயற்திட்டத்தின் கட்டம் - III ஆல் பேணப்பட்ட அதனையொத்த நடைமுறைக் கணக்கின் ரூபா 1,980,769,681 மீதியுடன் உடன்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 வருமதிகள்

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட ரூபா 696,473 கூட்டுத்தொகையான கொள்வனவு முற்பணங்கள் ஒரு வருடத்திற்கு அதிகமாக நிலுவையாகவிருந்தது. அத் தொகையில் தனியார் தரப்பினருக்கு வழங்கிய ரூபா 96,613 தொகையான முற்பணங்கள் ஐந்து வருடங்களுக்கு அதிகமாக தீர்க்கப்படாதிருந்தது.

## 3. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

மீளாய்வாண்டிற்கான நிதியங்களின் நிதியளிப்பு, பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டிலும் 2014 திசெம்பர் 31 வரையிலுமான நிதிகளின் பயன்பாடு என்பவற்றுடன் தொடர்புடைய சில முக்கியமான புள்ளிவிபரங்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| மூலம் | கடன் உடன்படிக்கையின்படி நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீடு | பயன்படுத்திய நிதிகள் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | 2014 ஆம் ஆண்டினுள் | | 2014 திசெம்பர் 31 வரை | |
| | ஜ.யென் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ஜ.யென் மில்லியன் | ரூபா மில்லியன் | ஜ.யென் மில்லியன் | ரூபா மில்லியன் |
| கடன் பி-89 | 21,917 | 24,547 | 4,642.0 | 3,481 | 3,792 | 23,499 | 25,598 |
| கடன் பி-91 | - | - | - | - | - | 11 | 12 |
| இலங்கை அரசாங்கம் | - | 8,920 | 80.5 | 80 | 87 | - | 6,240 |
| **மொத்தம்** | **21,917** | **33,467** | **4,722.5** | **3,561** | **3,879** | **23,510** | **31,850** |

- செயற்திட்டத்தின் கட்டம் - II இன் கீழ் கைச்சாத்திடப்பட்ட, கடன் இலக்கம் பி – 91 இன் கீழ் மேற்கொள்ளப்பட்ட நிதி ஒதுக்கங்களிலிருந்து செயற்திட்டத்தின் கட்டம் - I இன் ஆலோசனை கட்டணங்களை தீர்ப்பதற்காக ரூபா 12 மில்லியன் தொகையானது செலுத்தப்பட்டிருந்தது.

### 3.2 பௌதீக செயலாற்றல்

### 3.2.1 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஒப்பந்த நிபந்தனைகளின் பிரகாரம், ஒப்பந்தகாரர் வீதி நிர்மாண நோக்கங்களிற்காக தரக் காப்பீட்டு முறைமையை பின்பற்ற வேண்டியதுடன் அதற்காக தரக்காப்பீட்டு பதவியணியினர் ஒப்பந்தக்காரரால் திட்டமிடப்பட்டு வேலைக்கமர்த்தப்பட வேண்டும். எவ்வாறாயினும், மேற்குறிப்பிட்ட வேண்டுகோளுடன் ஒப்பந்தகாரர் இணங்கியிருக்காததுடன், இதன் காரணமாக தரக்காப்பீட்டு நடவடிக்கைகளிற்காக மேலதிக பதவியணியினர் செயற்திட்ட ஆலோசனையாளரால் வேலைக்கமர்த்தப்பட்டிருந்ததுடன் முரண் கட்டளை ஊடாக ரூபா 7.22 மில்லியன் தொகை கோரப்பட்டிருந்தது. மேலும், 2014 திசெம்பர் 31 வரை 81 நியமங்களின் படியல்லாத உற்பத்தி குறிப்புரைகள் வெளியிடப்பட்டிருந்ததெனினும், அவற்றுள் உள்ளடக்கப்பட்டிருந்த 05 குறிப்புரை தேவைப்பாடுகளை திருத்துவதற்கு 2014 திசெம்பர் 31 வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) குவியல் வரம்பின் பாரிய கான்கிரீட்களின் மீதான வெப்பநிலை கட்டுப்பாட்டு பொறிமுறை, அதிர்வு மற்றும் உதைவு என்பன குறிப்புரைகள் மற்றும் அளவுப்பட்டியலின் முறைமைக் கூற்றுக்களிலும் உள்ளடக்கப்பட வேண்டும். எவ்வாறெனினும், குறித்த பொறிமுறைகள் அளவுப்பட்டியலின் பகுதியொன்றாக உள்ளடக்கப்பட்டிராததுடன் அவை விலகல்களாக கருதப்பட்டிருந்தன. இதன் காரணமாக, முரண் கட்டளையின் கீழ் ரூபா 64.23 மில்லியன் தொகையான மேலதிக செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(இ) மேலும், அடுக்கு தொழிற்சாலையை நீண்ட காலப் பாவனைக்காக ஸ்தாபிப்பதற்கு போதியளவில் திட்டங்களின்மை காரணமாக பலமுறை அகற்றப்பட்டு மீள் நிறுவப்பட்டிருந்தது. இதனால், ரூபா 8.37 மில்லியன் கூட்டுத்தொகையான அகற்றுதல், போக்குவரத்து மற்றும் மீளமைத்தல் செலவினங்கள் முரண் கட்டளைகளின் கீழ் செயற்திட்டத்திற்கு சாட்டப்பட்டிருந்தது.

(ஈ) 2012 ஆகஸ்ட் மாதத்தின் 2/2102 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் மொத்த கொள்வனவு கிரயத்தின் உண்மைத்தன்மையை உறுதிப்படுத்துவதற்கு சகல விடயங்களையும் கருத்திற்கொள்வதன் மூலம் மேற்கொள்ளப்பட வேண்டும். எவ்வாறாயினும், 133 முரண் கட்டளைகளுடன் தொடர்புடைய ரூபா 3,600 மில்லியன் தொகையான சிவில் வேலைகளின் கிரயம் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் ரூபா 22.95 மில்லியன் பெறுமதியான 03 முரண் கட்டளைகள் ஆரம்ப மதிப்பீடுகளிலிருந்து மீளப்பெறப்பட்டிருந்ததென அவதானிக்கப்பட்டது. இந்த நிலைமை செயற்திட்டத்தின் தகராறுகள் மற்றும் பாதகமான விளைவுகளிற்கு வழிவகுக்கும். மேலும், அத்தகைய நோக்கெல்லை முரண்களிற்காக அமைச்சரவையால் அங்கீகரித்த கேள்விச் சபையிடமிருந்தான அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(உ) நெடுஞ்சாலைக்கான இடையில் தரித்துச் செல்வதற்கான கட்டிடங்களின் அறிமுகத்தால் நோக்கெல்லையில் ஏற்பட்ட மாற்றங்கள் காரணமாக ஒப்பந்தத்தின் மொத்தக் கிரயம் 20 சதவீதத்தால் விஞ்சியிருந்தது என அவதானிக்கப்பட்டது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i). செயற்திட்டத்தின் கட்டம் I இன் கீழ் நெடுஞ்சாலையின் மூல வடிவமைப்பில் உள்ளடக்கப்பட்டிருக்காத அத்துருகிரிய மற்றும் கொத்தலாவலயிலுள்ள இடையில் தரித்துச் செல்வதற்கான கட்டிடத்தின் நிர்மாணமானது முறையே ரூபா 2,078 மில்லியன் மற்றும் ரூபா 475.68 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்தில் தனியொரு ஒப்பந்தமாக அதே ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், ஒப்பந்த உடன்படிக்கை அந்த நோக்கத்திற்காக கையொப்பமிடப்பட்டிருக்காததுடன் வரிசை அமைச்சு செயலாளரின் சிபாரிசுகள் பெறப்பட்டிருக்கவில்லை.

(ii). மேலும், ஒப்பந்த நிபந்தனைகளின் 59.1 ஆம் கூறின் பிரகாரம் ஆரம்ப கட்டத்தில் மதிப்பிடப்பட்டிருக்காத அத்துருகிரியவில் உள்ள இடையில் தரித்துச் செல்வதற்கான கட்டிடத்திற்கான நடைபாதை நிர்மாணப் பணிகள் மற்றும் கருங்காரையிடல் ஒப்பந்தத்திற்கான செயற்திட்டத்தின் ஒருங்கிணைவு ஒப்பந்ததாரரால் பெற்றுக்கொள்ளப்பட்டிராததுடன், பணிகள் உப ஒப்பந்தக்காரரால் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அதன்மீது ரூபா 15.81 மில்லியன் செலவினமானது முரண் கட்டளையொன்றின் கீழ் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(iii). கொத்தலாவில் இடையில் தரித்துச் செல்வதற்கான கட்டிடத்தின் நிர்மாண வேலைகள் செயற்திட்டத்தின் கட்டம் II இன் கீழ் திட்டமிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், இடையில் தரித்துச் செல்வதற்கான நிரந்தரக் கட்டிடமொன்றின் நிர்மாணத்தில் ஏற்பட்ட தாமதம் காரணமாக ரூபா 176.74 மில்லியன் கிரயத்தில் நிர்மாணிக்கப்பட்ட இடையில் தரித்துச் செல்வதற்கான ஒரு தற்காலிக கட்டிடத்தின் செலவினங்கள் செயற்திட்டத்தின் கட்டம் I இற்கு சாட்டுதல் செய்யப்பட்டிருந்தன. அதனைத் தொடர்ந்து, இடையில் தரித்துச் செல்வதற்கான தற்காலிக கட்டிடம் ரூபா 10.10 மில்லியன் செலவில் இடித்து தகர்க்கப்பட்டிருந்தது. இடையில் தரித்துச் செல்வதற்கான நிரந்தரக் கட்டிடமொன்று ரூபா 481.60 மில்லியன் கிரயமான முரண் கட்டளையொன்றின் கீழ் நிர்மாணிக்கப்பட்டிருந்தது.

(iv). தெற்கு அதிவேக பாதையின் நடவடிக்கைகளை தொடங்குவதற்கு முன்னர் கொட்டாவையிலுள்ள இடையில் தரித்துச் செல்வதற்கான கட்டிடத்தின் நிர்மாணம் பூர்த்தியாக்குவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், இடையில் தரித்துச் செல்வதற்கான நிரந்தரக் கட்டிடமொன்றின் நிர்மாணத்தில் ஏற்பட்ட தாமதம் காரணமாக செயற்திட்டத்தின் கட்டம் - 01 இனால் ரூபா 258.92 மில்லியன் கிரயமான முரண் கட்டளையொன்றின் கீழ் தரித்துச் செல்வதற்கான தற்காலிக கட்டிடமொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், இடையில் தரித்துச் செல்வதற்கான தற்காலிக கட்டிடம் ரூபா 8.27 மில்லியன் செலவில் இடித்து தகர்க்கப்பட்டிருந்ததுடன், செயற்திட்டத்தினால் இடையில் தரித்துச் செல்வதற்கான புதிய நிரந்தரக் கட்டிடமொன்று ரூபா 945.33 மில்லியன் கிரயத்தில் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. தரித்து

செல்வதற்கான நிரந்தரக் கட்டிடங்களின் நிர்மாணத்தில் ஏற்பட்ட 36 மாத காலதாமதத்தின் மீதான ரூபா 16.91 மில்லியன் முடிவுறுத்தல் சேதமானது அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஊ) ஒப்பந்த நிபந்தனையின் 62.2 ஆம் உட்பிரிவில் நிர்ணயித்ததன் பிரகாரம், ரூபா 200 மில்லியனை விஞ்சியிருந்த இடைக்கால கொடுப்பனவுச் சான்றிதழ்கள் தொழில்நுட்ப மதிப்பாய்வு குழுவின் கவனத்திற்கு கொண்டுவரப்பட வேண்டும். எவ்வாறாயினும், ரூபா 200 மில்லியனை விஞ்சியிருக்காத இடைக்கால கொடுப்பனவுச் சான்றிதழ்கள் ( ஐபிசீ ) 2014 திசெம்பர் 31 வரை 10 சந்தர்ப்பங்களில் மதிப்பாய்வு செய்யப்பட்டிருந்தது.

(எ) அத்துருகிரியவிலுள்ள இடையில் தரித்து செல்லும் கட்டிடங்களின் நிர்மாணப் பணிகளை மேவுகை செய்வதற்கு இயலக்கூடிய வகையில் மதியுரை சேவைகளுக்கான ஒப்பந்தமானது 2014 ஆகஸ்ட் மாதத்திலிருந்து 2015 ஏப்ரல் மாதம் வரை நீடிக்கப்பட்டிருந்ததுடன் உரிய தரப்பினரின் சான்றுபடுத்தலின்றி முரண் கட்டளையொன்றின் அடிப்படையில் ரூபா 77.12 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது.

## 3.3 செயற்திட்டத்தின் காணிகளை சுவீகரித்தல் மற்றும் மீளக்குடியமர்த்தல் நடவடிக்கைகள்

நிதிக்கூற்றுக்களின் படி, செயற்திட்டச் செயற்பாடுகள் காரணமாக இடம்பெயர்ந்த குடும்பங்களை மீளக் குடியமர்த்துவதற்காக 6.2 ஏக்கர் பரப்பளவு கொண்ட ஆறு காணிகளை சுவீகரிப்பதற்காக 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரை செயற்திட்டத்தினால் ரூபா 2,719.6 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2011 திசெம்பர் இறுதியில் காணிகளை சுவீகரித்து மீளக் குடியமர்த்தல் நடவடிக்கைகளை பூர்த்திசெய்வதற்கு செயற்திட்டம் எதிர்பார்த்திருந்தமை அவதானிக்கப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அதிவேகப் பாதையின் 01 ஆம் கட்டத்தின் காணிகளை சுவீகரித்தல் நடவடிக்கைகள் 99 சதவீதத்தினால் பூரணப்படுத்தப்பட்டிருந்ததுடன் அத்திகதியில் உள்ளவாறு மீளக் குடியமர்த்தல் நடவடிக்கைகள் 86 சதவீதத்தினால் மாத்திரம் பூரணப்படுத்தப்பட்டிருந்தது.

(ஆ) இடம்பெயர்ந்த நபர்களை மீளக் குடியமர்த்துவதற்காக 2009 ஆம் ஆண்டில் ரூபா 71.82 மில்லியன் கிரயத்தில் கடுவலையில் அமைந்துள்ள 324.17 பெர்ச்சர்ஸ் பரப்பளவு கொண்ட காணி செயற்திட்டத்தினால் கையேற்கப்பட்டிருந்ததுடன் காணியின் அபிவிருத்தி நடவடிக்கைகளிற்காக ரூபா 23.92 மில்லியன் தொகையும் பின்னர் செலவிடப்பட்டிருந்தது. சுவீகரிக்கப்பட்ட இக் காணி 21 துண்டுகளாக கூறிடப்பட்டிருந்ததுடன் அதில் 08 துண்டுகளை இடம்பெயர்ந்த நபர்களிற்கு கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் செயலற்று காணப்பட்டன.

## 3.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான விடயங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன

(அ) செயற்திட்டத்தால் ஒப்பந்த நிபந்தனைகளில் மேவுகை செய்யப்படாத ரூபா 1,000 மில்லியன் மேலதிக முற்பணம் ஒப்பந்ததாரருக்கு செலுத்தப்பட்டிருந்ததுடன் அவை இடைக்கால கொடுப்பனவு சான்றிதழ்கள் மூலம் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. எனினும், ஒப்பந்த காலத்தின் இறுதியில் ஒப்பந்ததாரருக்கு செலுத்த வேண்டிய பிடிமாணத் தொகையிலிருந்து ரூபா 587.05 மில்லியன் அறவிடப்பட்டிருந்தது.

(ஆ) செயற்திட்டத்தின் அமுலாக்கலில் ஏற்பட்ட காலதாமதம் காரணமாக, செயற்திட்டத்தால் கடனின் செலவிடப்படாத மீதிகளின் அடிப்படையில் ரூபா 750.39 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(இ) காணி சுவீகரிப்பிற்கான இழப்பீடுகளைச் செலுத்துவதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 76.60 மில்லியன் வட்டி செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) 2003 யூன் 02 ஆந் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது திறைசேரியின் பொது முயற்சிகள் திணைக்களத்தின் சுற்றறிக்கையின் 8.3.9 ஆம் பிரிவிற்கு முரணாக மேந்தலைகளாக வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு 2014 திசெம்பர் 31 வரை ரூபா 141.74 மில்லியன் தொகை அனுப்பப்பட்டிருந்தது.